**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC.234/2016**

**Deposition of P.W.** 6

Name : திரு. ராஜாராம்

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:**22.01.2025**

Accused Present

முதல் விசாரணை–

நான் கனிமவளத்துறையில் துணை இயக்குனராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது சேலத்தில் வசித்து வருகிறேன். 20.10.2012ம் தேதி மார்த்தாண்டம் காவல் ஆய்வாளரிடமிருந்து கிடைக்கப்பெற்ற கடிதப்படி நான் என்னுடைய அலுவலக உதவி புவியியலாளர் கொடுத்த அறிக்கையின் அடிப்படையில் மார்த்தாண்டம் காவல் ஆய்வாளருக்கு 09.11.2012ம் தேதி அறிக்கை அனுப்பினேன். அந்த அறிக்கை அ.சா.ஆ.3. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

நான் நிலத்தை தணிக்கை செய்ய அங்கு செல்லவில்லை. அ.சா.ஆ.3ஐ தவிர நான் வேறு அறிக்கை எதுவும் கொடுக்கவில்லை. 05.07.2010 வரை சம்மந்தப்பட்ட நிலத்திலிருந்து பாறை வெட்டி எடுக்க அனுமதி வழங்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். அஜய் என்பவர் பெயரில்

உரிமம் வழங்கப்பட்டிருந்து என்றால் சரியல்ல. அஜய் என்பவர் பெயரில் 09.04.1996 முதல் 08.04.2001 வரை உரிமம் வழங்கப்பட்டிருந்தது. அதன் பிறகு நீதிமன்றத்தின் மூலம் உரிமம் பெற்றிருந்தார். அனுமதி வழங்கப்பட்டிருந்த காலத்தில் வெட்டி எடுக்கப்பட்ட பாறையின் அளவு கனிமவளத்துறையில் இருக்கும். அனுமதியுள்ள காலத்தில் வெட்டி எடுக்கப்பட்ட பாறையின் அளவை வைத்து தான் அனுமதி இல்லாமல் எவ்வளவு வெட்டி எடுக்கப்பட்டது என்பதை கண்டறிய முடியும் என்றால் சரிதான். பாறையின் இறுதி அளவுகள் எங்கள் அலுவகத்தில் இருந்து பெறப்படவில்லை. வெடிமருந்து துறையிடமிருந்து நான் ஆவணங்கள் கேட்டு பெறவில்லை. தணிக்கை சென்ற குழுவில் இருந்து எங்களுக்கு அறிக்கை தரப்பட்டுள்ளது. காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை. தணிக்கை குழு அறிக்கையை நான் காவல் ஆய்வளருக்கு கொடுக்கவில்லை. நான் எனது அறிக்கையை மார்த்தாண்டம் காவல் ஆய்வாளருக்கு தான் கொடுத்தேன். வேளிமலை காவல்நிலையத்திலிருந்து வழக்கு பதிவு செய்யப்பட்டதாக எனக்கு தகவல் கிடைக்கவில்லை. தணிக்கை துறை எதன் அடிப்படையில் வெட்டி எடுக்கப்பட்ட கல்லின் அளவை தீர்மானித்தார்கள் என்று எனக்குத் தெரியாது. தணிக்கை குழுவினருடன் நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை. முறையான தகவல்களை பெறாமல் அ.சா.ஆ.3 அறிக்கை வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.